DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

வழக்கு எண். CC No.177/2023

வழக்கு சாட்சி: **PW.1** நாள்: 14.11.2024.

Evidence Recorded From:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனியப்பன் | ஜாதி: | |
| த/பெ./ க/பெ. | கோவிந்தசாமி | தொழில்: | |
| கிராமம் | | சமயம்: | |
| தாலுக்கா | | வயது: | |
| எதிரி ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 14.11.2024.

**முதல் விசாரணை** –

1. நான் தற்போது மாதன்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது பக்கத்து நிலத்துகாரர்கள் ஆவார்கள். கடந்த 09.12.2021–ம் தேதி மாலை 05.00 மணிக்கு எனது நிலத்தில் உழவு பணிக்காக ராஜகோபால் என்பவரின் டிராக்டர் வாகனத்தை அழைத்துசென்றுயிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் டிராக்டர் செல்லமுடியாதவாறு பாதையை வெட்டி கல்லை போட்டுயிருந்தனர். நான் அதுகுறித்து கேட்டபோது வாகனம் செல்லகூடாது என்றும், சென்றால் கொன்றுவிடுவோம் என இருவரும் மிரட்டினார்கள்.

2. எதிரிகள் என்னை தேவடியாபையா, கண்டாரோலிபையா வெட்டிவிடுவேன் என்று திட்டினார்கள். பின்னர் நான் மதிகோண்பாளையம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் அ.சா.ஆ.1 ஆகும்).** போலிசார் என்னை வழக்கு குறித்து விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – (எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை).